THE HINDU TAMIL
Date: 27/10/18

தமிழக கோயில்களில்

# பிளாஸ்டிக் உபயோகம் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது

● அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன் தகவல்

சென்னை

தமிழக கோயில்கள் அனைத்திலும் பிளாஸ்டிக் உபயோகம் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன் கூறினார்.

தமிழக திருக்கோயில் வளாகங்களை பசுமையாக்கிட சிறந்த சுற்றுச்சூழல் மேம்பாடு குறித்த வல்லுநர்கள் பங்கேற்ற கருத்தரங்கம் மற்றும் பசுமை கோயில் திட்ட தொடக்க விழா சென்னையில் நேற்று நடைபெற்றது.

தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை, எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் மற்றும் ஐடிசி நிறுவனம் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கில், எக்ஸ்னோரா அமைப்பின் நிறுவனர் எம்.பி. நிர்மல் வரவேற்றார். நிகழ்ச்சியில் பேசிய எக்ஸ்னோரா பசுமை இயக்கத் தூதுவரும், பாடகியுமான அனுராதா ஸ்ரீராம், "அமெரிக்காவில் 5-ம் வகுப்பு முடித்த உடன் மாணவர்களுக்கு சமூக சேவை கட்டாயமாக்கப்பட்டுள்ளதைப் போல, நம் நாட்டிலும் மாணவர்களுக்கு பள்ளியில் சமூக சேவை செய்வதை கட்டாயம் ஆக்க வேண்டும்' என்றார்.

> ▼ பிரசாதங்களை பிளாஸ்டிக் பைகளில் வழங்குவதை தவிர்த்து பேப்பர் பிளேட், பாக்கு மட்டை மற்றும் துணிப் பைகள் போன்றவற்றை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் அமைச்சர் சேவூர் எஸ்.ராமச்சந்திரன் பேசியதாவது:

கோயில்களில் இருந்து சேகரிக்கப்படும் திடக் கழிவுகள், கோசாலைகளில் இருந்து பெறப்படும் மாட்டுச் சாணம் ஆகியவற்றைக் கொண்டு சாண எரிவாயு தயாரிக்கப்பட்டு அன்னதானத் திட்டம், விபூதி தயாரித்தல் போன்றவற்றுக்கு ஏற்கெனவே கபாலீஸ்வரர் கோயிலில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மற்ற கோயில்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

தமிழக அரசின் அறிவிப்பை செயல்படுத்தும் முனைப்புடன் தமிழக கோயில்கள் அனைத்திலும் பிளாஸ்டிக் உபயோகம் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. பிரசாதங்களை பிளாஸ்டிக் பைகளில் வழங்குவதை தவிர்த்து பேப்பர் பிளேட், பாக்கு மட்டை மற்றும் துணிப் பைகள் போன்றவற்றை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பசுமை கோயில் திட்டத்தை தமிழகத்தில் உள்ள அனைத்துக் கோயில்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் ராமச்சந்திரன் கூறினார

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் தா.கி.ராமச்சந்திரன், ஐடிசி நிறுவனத்தின் ரவி ராயவரம், இந்துசமய அறநிலையத் துறை இணை ஆணையர் எஸ்.ஹரிபிரியா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.